REG. NO. M. 2997.

தனிப்பிரதி அணா 1

**RÉPUBLIQUE FRANÇAISE**

LIBERTÉ.—ÉGALITÉ.—FRATERNITÉ.

PULSATE ET APERIETUR VOBIS

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

LE RÉDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI.
Tamil Pandit
Jaffna
CEYLON.

# VITTAGAM

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER
MADAM, No. 2,
Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.
குறள்.

காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. II. | புதுவை, யுவ ௵ சித்திரை ௴ ௧௨ ௳ (25—4—35) | NO. 22.

## திருமந்திரம்.

கண்டவிச் சத்தி யிருதய பங்கயங்
கொண்டவித் தத்துவ நாயகி யானவள்
பண்டையவ் வாயுப் பகையை யறுத்திட
வின்றென் மனத்து ளினிதிருந் தாளே.

தாங்கிய நாபித் தடமலர் மண்டலத்
தோங்கி யெழுங்கலைக் குள்ளுணர் வானவ
ளோங்க வரும்பிறப் பெண்ணி யறுத்திட
வாங்கிய நாதம் வலியுட னாகுமே.

உணர்ந்திருந் துள்ளே யொருத்தியை நோக்கிற்
கலந்திருந் தெங்குங் கருணை பொழியு
மணந்தெழு மோசை யொளியது காணுந்
தணந்தெழு சக்கரந் தான்றரு வாளே.

ஏய்ந்த மரவுரி தன்னி லெழுதிய
வாய்ந்தவிப் பெண்ணெண்பத் தொன்றி னிரைத்தபின்
காய்ந்தவி நெய்யுட் கலந்துட னேமமு
மாய்ந்தலத் தாமுயி ராகுதி பண்ணுமே.

பண்ணிய பொன்னைப் பரப்பற நீபிடி
யெண்ணிய நாட்களி லின்பமு மெய்திடு
நண்ணிய நாமமு நான்முக னேத்தபின்
றுண்ணென நேயநற் சேர்க்கலு மாகுமே.

தாளதி னுள்ளே சமைந்தமு தேசுவரி
காலது கொண்டு கலந்துற வீசிடி
னாளது நாளும் புதுமைகள் கண்டபின்
கேளது காயமுங் கேடில்லை காணுமே.

570



உ

திருவருள் துணை.

ம்
நந்திபதி
கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

[திருவாசகம்]


# வித்தகம்

புதுவை

யுவ ஹு சித்திரை மீ 12 உ


## மறைக்காட்டுக் கதவு திறத்தல்.

மறைக்காட்டுக் கதவு திறத்தல் என்பதன் உண்மை ஈண்டு ஒரு சிறிது விளக்கமுற உரைக்கப் படும். அகிலத்து அமைந்த இடுகுறி யான ஆலயங்களில் கதவு திறக்கப் படவே—திரை நீக்கப்படவே கடவுள் உருவம் — விக்கிரக வடிவம் காணப் படும். இது போலவே எமது சரீரமா கிய ஆலயத்தும் மறைக்காட்டுக் கத வம் திறக்கப்படவேண்டும். அப் பொழுதுதான் கடவுள் தரிசனம் — வேத வடிவினனாகிய ஆசான் தரிசனம் — சிவ தரிசனம் உளதாகும். அசுத்த மாகிய மாயையே—அழுக்கே—மலமே — பாசமே மறைப்பு எனப்படுவது; கதவு எனப்படுவது; திரை எனப்படு வது.

### தாயுமானவர் பாடல்.

குன்றுதலுருவாய் அருவாய்ஞானக்
கொழுந்தாகிஅறுசமயக்கூத்துமாடி
நின்றுயேமாயைஎனும்திரையைநீக்கி
நின்னையார்அறியவல்லார்நினைப்போர்
[நேஞ்சம்
மன்றகஇன்பக்கூத்தாடவல்ல
மணியேயென்கண்ணேமாமருந்தேநால்
[வர்க்(கு)
அன்றுஆலின்கீழிருந்துமோனஞானம்
அமைத்தசின்முத்திரைக்கடலேஅமர
ரேறே.

(ஷை பன்மாலை செ. 8.)

மாயையாகிய திரையே கடவுளை மறைத்திருப்பது. மாயையே சத்தி யத்தின் ஆதித் தோற்றம். அதன் அடிப்படையில் விளங்குவதே சத்தி யம் சத்தியமாகிய சிவம் என்க. "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய இச் சிவம் எனும் செம்பொருள் அமல ஒளிவடிவாய்—அமல ஒலிவடிவாய்— அமல நாத வடிவாய் விளங்குவது. அசுத்தமாகிய மாயை என்னும் திரை திரை என்னும் மறைப்பு நீங்கிய இடத்து அமலமாகிய ஐவனம் என் னும் கன்னிவனம் காணப்படும்— அடையப்படும். மறைக்காடு எனப் படுவது இதுவே என்க. அமல நாத வேதங்கள் — நான்மறைகள் ஒலிக்கும் இடமாதலின் இது மறைக்காடு எனப் பட்டது. இதுதான் ஐவனம்—அமல ஐகாரம் விளங்கும் இடம். இதுதான் கன்னிவனம்; அமல காயப் பெண்ணா கிய ஞான சத்திக்கு உரிய இடம் — சிங்காரவனம் என்க.

"அன்னையே பின்னையும் கன்னி என
மறைபேசும் ஆனந்தரூப மயிலே."

என்றனர் தாயுமானவர். இம்மறைக் காட்டில் வேதங்கள் ஓவாது ஒலித்துக் கொண்டே இருக்கும். ஒலி ஒளி நட னம் அசைவு என்பன ஒன்றே. எம் பெருமான் திருநடனம் ஈண்டுக் காணப்படும். மாயை என்னும் கதவு திறக்கப் பட்டபோதுதான் — பாச மெனும் தாழ் உருவப்பட்டபோது தான்—மலம் விமலமானபோதுதான் —மாற்றிப் பிறந்தபோதுதான் மறைக் காடு என்னும் கன்னிவனம் அடையப் படும் என்க. அப்பொழுது தான் சிவ தரிசனம் கிடைக்கும். அன்றேல் சிவ தரிசனம் முயற்கொம்பே யாகும்.

### தனிப்பாடல்.

இன்னதிதுவென்றிறைவன்திறமதனைச்
சொன்னமறையுந்துணிந்தறியாதம்மானை
சொன்னமறையுந்துணிந்தறியாதாமாயின்
கன்னிவனம்அடைந்தால்காணலாம்
[அம்மானை
கண்டார்பிறிதொன்றுங்காணார்காண்
[அம்மானை.

"சொன்னமறையும்துணிந்துஅறியாது"

என்பது உலகில் வேதங்கள் என வழங்கும் நூல்கள் இறைவன் திரு வடியை அடைதற்கு நேரே வாயிலா காமையை உணர்த்தி நின்றது. "பிறி தொன்றும்காணார்" என்பது அசுத்த மான மாயா வஸ்துக்களைக் காணமாட் டார்—அருளையே காண்பார் என்னும் பொருளுடையது.

"திருவடியைக்கண்டகண்கொண்டு
மற்றினிக்காண்பதென்னே"

(அப்பர்தேவாரம் கோயில்திருவிருத்தம்
[செ. 2.)

என அப்பர் அருளியதும்,

"ஆர்ந்தஇடம்அத்தனையும்அருளாயிருக்கு
[தடா
சார்ந்தஇடமெல்லாம்சவ்வாதுமணக்கு
[தடா."

எனப் பட்டினத்தடிகள் அருளிய தும் (ஷை புலம்பல்) அறிக. மாயா சரீர பாவனையாகிய அசுத்த சரீர பாவனை ஒழிய வேண்டும். அஃதாவது கயிலை முதற்குரவனாகிய எம் பெரு மான் அருளால் பெறப்படும் உரிய

சாதகங்களால் மல தநுவானது விமல தநுவாக மாற்றமடைய வேண்டும். அப்பொழுது தான் பெருந்துறைத் தரிசனம் — சிவ தரிசனம் உளதாகும் — கன்னி வனம் அடையப்படும் என்பது. சரீரமே நந்தி எனப்படுவது. அசுத்த சரீரமாயும் விமல தநுவாயும் அமல தநுவாயும் விளங்குபவன் ஞான சத்தி வடிவினனாகிய எம்பெருமானே ஆவன். மெய்யடியாராகிய நந்தனாருக்கு நந்தி விலகிய பின் சிவதரிசனம் கிடைத்தது என்பதும் மாயையாகிய கதவம் திறக்கப்பட்டபின் கன்னி வனம் காணப்பட்டது — மறைக்காடு அடையப்பட்டது என்னும் உண்மையையே கருதியதாகும். எம்பெருமானே பரஞ்சுடர் உருவாயும் அசுத்த சரீரமாயும் — உடலுயிராயும் நிற்பவன் என்பது பின் வரும் வேத நூற் பிரமாணத்தாலும் நன்று வலியுறுதல் கண்டு கொள்க.

## திருவாய்மொழி.

பரஞ்சுடருருவாய்அழுக்குப்பதிந்தஉடம்
[பர்ய்
கரந்தும்தோன்றியும்நின்றும்கைதவங்கள்
[செய்தும்விண்ணோர்
சிரங்களால்வணங்கும்திருவிண்ணகர்ச்
[சேர்ந்தபின்
வரங்கொள்பாதமல்லால்இல்லையாவர்க்கும்
[வண்சரனே.

[திருவிண்ணகர் — ஞானாகாசம் — பெருந்துறை — அகண்ட வெளி — கன்னிவனம். கதவு திறத்தலால் காணப்படுவது அடையப்படுவது இதுவே. "வரங்கொள்பாதமல்லால் இல்லை யாவர்க்கும்வண்சரணே" என்பது "திருவடியைக்கண்ட கண் கொண்டு மற்றினிக்காண்பதென்னே" என்னும் பொருளுடையது. மாயையாகிய மறைப்பு நீங்கி—சரீர பாவனை நீங்கி—அஞ்ஞானமாகிய இருள் நீங்கி அகண்ட வெளிகாண்டலே— சிவ தரிசனம் பெறுதலே கதவு திறந்து கன்னி வனமடைதல் — மறைக்காடு அடைதல் என்பதன் பொருளாகும். அப்பர் பெருமான் மறைக்காட்டுக் கதவு திறந்து சிவ தரிசனம் செய்தனர் என்னும் நிறை முறையான கற்பனையின் உண்மையும் இதுவே ஆம்.

## அப்பர் தேவாரம்

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினால்உமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்மினே.

ஈண்டுசெஞ்சடையாகத்துளீசரோ
மூண்டகார்முகிலின்முறிக்கண்டரோ
ஆண்டுகொண்டநீரேஅருள்செய்திடும்
நீண்டமாக்கதவின்வலிநீக்குமே.

(ஷை திருமறைக்காடு-திருக்குறுந்தொகை
[செ. 1, 2.)

இடுகுறியாகிய ஆலயக் கதவை அப்பர் திறந்தார் என்னும் சரிதாசிரியர் கூற்று உலகியல் நோக்கியது.

"நீண்டமாக்கதவின்வலி" என்பது அநாதியே பீடித்துள்ள அஞ்ஞான மறைப்பின் பேராற்றலை உணர்த்தி நின்றது. இத்தகைய வலிமையுடைய கதவு திறக்கப்படவேண்டும் என்று மெய்யடியார் இரங்கியமை அவ்வவர் அருளிய பாடல்களால் வெள்ளிடைமலையாம்.

## திருவாசகம்.

"முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்
[தெதிர்எழுந்தென்
அத்தன் ஆனந்தன்அமுதனென்றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய்வந்துன்கடைதிற
[வாய்......"

"மாலறியாநான்முகனும்காணாமலையினை
[நாம்
போலறிவோம்என்றுள்ளபொக்கங்களே
[பேசும்
பாலூறுதேன்வாய்ப்படிறீகடைதிறவாய்..."

(ஷை திருவெம்பாவை செ. 3, 5.)

[மலை — பொன்னெடுங்குன்றம்: "பொன்னெடுங்குன்றம் ஒன்று உண்டு கண்டீர் இப்புகலிடத்தே" என்றார் நமது அப்பர். கன்னிவனமே—மறைக்காடே புகலிடம் என்க.]

## திருவாய்மொழி.

### நாச்சியார் திருமொழி.

"கீசுகீசென்றெங்குமானைச்சாத்தான்
[கலந்து
பேசினபேச்சரவம்கேட்டிலையோபேய்ப்
[பெண்ணே
........................................................"
தேசமுடையாய்திறவேல்ஓர்எம்பாவாய்.

(ஷை திருப்பாவை செ. 7.)

[ஆனைச்சாத்தான் ஒரு குருவி. இது அதிகாலையில் எழுந்து பேசுவது. இப்புள் ஒலி அருணோதய மாதற்கு அறிகுறியாகும். இப்பறவை மிகமிக சிறிய ஆனைக்குட்டி போன்ற வடிவம் உடையதாதலின் ஆனைச்சாத்தான் எனப்பட்டது போலும். சாத்து—வடிவம். "உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோடு உடன் போவதற்கே ஒருப்படுமின்" (திருவாசகம் யாத்திரைப்பத்து செ. 5) என்புழி சாத்து என்பது தூல சரீரம் எனப்பொருள் படுதல் காண்க. இல்லைத் துறத்தலே—திறத்தலே — அஞ்ஞானமாகிய மறைப்பு என்னும் இருள் நீங்குதலே மாயையைத் துரத்தலே கதவு திறத்தல் என்பதும் அஞ்ஞான்று அருணோதயம் என்னும் சிவ தரிசனம் உளதாதலும் இதனால் நன்று வலியுறுதல்கண்டு கொள்க.

"திறவிலேகண்டகாட்சியே"

என்னும் மணிவாசக சுருதியின் பொருளையும் நோக்குக.]

## திருவாய்மொழி.

"......மாமான்மகளே மணிக்கதவம்
தாள்திறவாய்......"

"......தேற்றமாய்வந்து திறவேல்ஓர்எம்
[பாவாய்."

"......நேயநிலைக்கதவம்நீக்கேல் ஓர்எம்
[பாவாய்."

(ஷை திருப்பாவை செ. 9, 10, 16.)

பின் வரும் வேதப் பிரமாணமும் மறைக்காட்டுக் கதவம் திறத்தலின் உண்மை இன்னது என்பதனையும் அதனால் ஆம் பயனையும் நன்று வலியுறுத்துதல் கண்டு கொள்க.

## சிவவாக்கியர்பாடல்:

———

எத்திசைக்கும் எவ்வுயிர்க்கும் எங்கள்
[அப்பன்எம்பிரான்
முத்தியான வித்துளே முளைத்தெழுந்த
அச்சுடர்
சித்தமுந்தெளிந்து வேதகோயிலும்
[திறந்தபின்
அத்தனுடல் கண்டபின் அடங்கலாடல்
[காணுமே.

(ஷை செ. 56)

இருவினை ஒப்பு மல பரிபாகம் வாய்ந்து சித்தம் தெளிவடைந்த போதுதான் உடலாகிய வேத கோயிற் கதவம் திறக்கப்படும் என்பார் "சித்தமும் தேளிந்து வேத கோயிலும் திறந்த போது" என்றார். நமது சீரமே வேத கோயில் — வாய்மையான சிவாலயம். "வேதத்தின் ஒத்தஉடல்" என்றார் திருமூலர் (திருமந்திரம்). வேதங்களாகிய அமல நாதங்கள் நமது சீரமாகிய ஆலயத்துள் ஓவாது ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. வேத கோயிற் கதவம் திறந்த போது தான் — அசுத்த சரீரமாகிய — சரீர பாவனையாகிய அழுக்கு என்னும் திரை நீங்கிய போது தான் நம்முள்ளே அத்தன் ஆடல் காணப்படும். பின் எங்கும் அவ் ஆடல் காணப்படும். மெய்யடியார் விமலதனுவுள் நெஞ்சத்தில் நெஞ்சமாகிய கண்டத்தில் உள்ளும் புறம்பும் அங்கும்இங்கும் எங்குமாய் ஆரோகண அவரோகணமாய் ஓவாது ஒலிப்பன வேதம் — அமல நாதம் என்க. தன்னிலையில் நடனம் காணப்படாத போது — நடனம் என்னும் அமல ஒலி கேட்கப்படாதபோது முன்னிலையில் நடனம் காணப்படுதல் — அமல ஒலி கேட்கப்படுதல் முடியாத காரியமே. தன்னுள்ளே கதவு திறக்கப்பட்டு கன்னி வனம் என்னும் மறைக்காடு அடையப்பட்ட போது எங்கும் இறைவன் திருவடி நடனமே யன்றிப் பிறிதொன்றும் காணப்படமாட்டாது. இது பற்றியே,

"திருவடியைக் கண்ட கண் கொண்டு மற்றினிக் காண்பது என்னே."

என்றார் நமது அப்பர் என அறிக.

கதவு திறத்தல் எவ்வாறு? எனின், அதுதான் வாய்மையான திறவு — துறவு என்று கூறப்படும். திறத்தலே துறத்தல். திறப்பு துறப்பு என்பன ஒற்றுமை வழக்கு. துறத்தலே துறவறம். இல் அருது இருப்பதே இல்லறம் என விதந்து கூறப்படுவது. அவ் இல்லைத் திறத்தலே — துறத்தலே துறவறம் என விதந்து கூறப்படுவது. "திறவிலே கண்டகாட்சியே" என்றனர் மணிவாசகர்.

## திருவாசகம்

———

அறவையேன் மனமே கோயிலாக் கொண்
[டாண்
டளவிலா ஆனந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியவெம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(ஷை பிடித்தபத்து செ. 6.)

இதனால், நமது உடலத்துள்ள இருதய கமலமே — தகராகாசமே — கன்னி வனமே வாய்மையான கோயில் என்பதும் குருவருளால் பெறப்படும் உரிய சாதகங்களால் அதனைத் திறத்தலே மறைக்காட்டுக் கதவம் திறத்தல் என்பதும் அப்பொழுது தான் சிவதரிசனம் உளதாகும் என்பதும் வெள்ளிடை ஆம். துறத்தலே துரத்தலும் ஆம். (ரகர மெல்லினம் வல்லினமாய் வழங்குவதும் இயற்கையே.) துரத்தல் என்றால் என்னை? அது தான் காயமாயத்தைக் கழித்தல் என்பது.

"சர்யமாயத்தைக் கழித்தருள் செய்யாய்" என்றது மாணிக்கம். அசுத்த மாயா சரீரமாகிய மல சரீரம் அவ் அசுத்தம் நீங்கி விமலமாவதே மாயையைத் துரப்பது — நீக்குவது — ஒழிப்பது என்பது. இப்பெற்றி வாய்ந்தவரே பாசங்கள் பற்றுக்களை ஒழிக்க வல்லராவர். இவரே அசுத்தமான மாயா சம்பந்தங்களைத் துறந்தவர் — துரந்தவர் — நீத்தவர் — நீத்தார் என்க. இவரே வாய்மையான துறவிகள் என்க. இவ்வாறு கதவம் திறந்து — மாயையைத் துரந்து கன்னி வனம் என்னும் அம்பிகையின் சிங்கார வனம் அடைந்து — பழமுதிர் சோலை அடைந்து — கற்பக வனம் அடைந்து — பொன்னுலக வாழ்வு பெற்று சகல போகங்களையும் — நினைத்தவை யாவற்றையும் கண்டு நிறையோடு உண்டு விமல அவாவையும் விண்டு உபரதி பெற்று அமல வடிவினராய் விளங்கா நிற்கும் வாய்மையான துறவிகள் பெருமையை — நீத்தார் பெருமையை — மெய்யடியார் பெருமையை என்னென்று உரைக்க முடியும்? உலகம் தோன்றிய காலம் தொட்டு இறந்து போன சீவர் தொகையைக் கணக்கிட்டுக் கூற முடியாதது போலவே, மெய்யடியாராகிய நீத்தார் பெருமையும் இவ்வளவினது என அளவிட்டு இயம்ப ஒண்ணாதது என்றார் நமது பொய்யில் புலவர்.

## குறள்.

——

துறந்தார் பெருமை துணைக்கூறின் வை
[யத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

(ஷை 3-ம் அதி. நீத்தார்பெருமை செ. 2.)

வாய்மையான துறவிகளாகிய மெய்யடியார் பெருமை அளவிடுதற்கு அரியது என்பதற்கு இதனினும் சிறந்த உவமானம் பிறிதில்லை. இது பற்றியே,

தொண்டர்தம்பெருமைசொல்லவும்பெரி
[தே
அடியார்தம்பெருமைஅளக்கவும்பெரிதே.

எனப் பெரியாரும் பணித்தார் என அறிக. குருவருளால் பெறப்படும்

உரிய சாதகங்களை வழுவறத் தாங்கி ஒழுகி—நிறை முறையான அருந்தல் பொருந்தல்களாகிய தூலப் பயில்வுகளும் சூக்குமப் பயில்வுகளுமாகிய ஒழுக்கத்தில் வழுவாது நின்று மாயையைத் துரந்தவர் — நீத்தவர் — அடிப்படுத்தியவர் — விதியை வென்றவர் பெருமையே யாவற்றிலும் விழுமியது — மேலானது என்பதே தத்துவப் பெரியார் துணிபும் வேத முடிபும் ஆம் என்க.

இவ் உண்மையையே பின் வரும் குறட் பாவால் விளக்கி யருளினார் நமது பொய்யில் புலவர் என அறிக.

## குறள்.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிபு.

(ஷை ஷை செ. 1.)

பனுவல் துணிபு— வேத உண்மை; வேத முடிபு. விழுப்பத்து வேண்டும் —சிறந்ததாகக் கொள்ளும். காய மாயம் கழிதலே — மாற்றிப் பிறத்தலே மாயையைத் துரத்தல் — துறத்தல் என்பதனைப் பின் வரும் தேவர் வாக்கும் நன்று புலப்படுத்துகின்றது.

## குறள்.

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப் [பறுக்கல்
உற்றார்க் குடம்பு மிகை.

(ஷை 35-ம் அதி. துறவு செ. 5.)

செனன மரணப் பீழையை நீக்கி வீடு பெறச் சமைந்தார்க்கு அசுத்த தநுவாகிய மருளுடம்பு ஒழிக்கப் படவேண்டியதாகும். அஃதாவது மாற்றப் படவேண்டிய தாகும். அங்ஙனமாகும் போது அசுத்தமான மாயா சம்பந்தமான பிற தொடர்புகள் அவர் தமக்கு உளவாதல் எங்ஙனம்? என்பது இதன் பொருளாகும். அசுத்தமான தொடர்புகள் மருளுடம்புக்கே உரியனவாம். அது ஒழிக்கப்படவே — மாற்றமடையவே அசுத்தமான மற்றைய தொடர்புகளும் ஒழிந்துவிடும் — மாற்ற மடையும் என்பது கருத்து. அசுத்தமான தொடர்புகள் மாற்றமடைதல்-அசுத்த தநு மாற்றமடைதல் பின் வரும் பிரமாணத்தாலும் நன்று வலியுறுகின்றது.

## அப்பர் தேவாரம்.

நீற்றினானிமிர் புன்சடையான் விடை
எற்றினான்நமையாளுடையான்புலன்
மாற்றினான்மயிலாடுதுறையென்று
போற்றுவார்க்குமுண்டோபுவி [வாழ்க்கையே.

(ஷை திருமயிலாடுதுறை-திருக்குறுந் [தொகை செ. 7)

“மாற்றிப்பிறக்கவகையறிந்தாயில்லை”

எனப் பட்டினத்தடிகள் அருளியதும் அறிக. தூலம் அசுத்தம் நீங்கி விமலம் பெறாதபோது பொறிபுலன் மாற்றமடைதல் — சூக்குமம் மாற்ற மடைதல் முயற்கொம்பேயாகும். “மாற்றிப் பிறத்தல்” என்னும் கட்டுரையை நோக்குக. “வித்தகம்” தொகுதி 1 இல. 38) மாற்றிப் பிறந்து நித்தியத்துவம் பெறாதார் மாயை வலைப்பட்டு உழலுதல்—பிறவி வலைப்படுதல் சத்தியமேயாகும். காய மாயம் கழிதலே—மாற்ற மடைதலே மாயையைத் துரத்தல்—துறத்தல் என்பது இதனால் நன்று வலியுறுதல் கண்டு கொள்க. இவ் உண்மைகளை ஒரு சிறிதும் அறியாது அசுத்தமான அவா மலியப் பெற்ற—அழுக்கு மலியப் பெற்ற மருளுடம்போடு வேடம் பூண்டு நடிப்போரை—முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணித்து உறவு படுத்தி உய்தியடைய அறியாது—ஒப்புர வொழுக அறியாதுசில முன்னிலைகளுக்கு அஞ்சி ஒரு பால் ஒதுங்கி வேறு முன்னிலைகளைக் கண்டு களித்து நிறை முறை இன்றி ஒழுகி நடிப்போரை – ஒருபால் ஒதுங்குவோரை துறவிகள் என்பது வெறும் வார்த்தையே யாகும். சகல போகங்களையும் வேண்டியவாறு கண்டு உண்டு அவாவினை விண்டு உபரதி பெறும் ஆற்றல் இல்லாதவன்—புண்ணியம் இல்லாதவன் அவற்றைத் துறந்தேன் -- வெறுத்தேன் என்பானாயின் அக்கூற்று வாய்மையாகுமா? யாவற்றையும் கண்டன்றோ--அநுபவித்தன்றோ -- யாவும் தன்னிடத்து இருக்கப் பெற்றன்றோ ஒருவன் அவற்றைத் துறக்க வேண்டும் – துரக்க வேண்டும்? ஆதலால் அமல முதற்படி கண்டு எம்பெருமானுக்குப் பிள்ளைகளாய் மூவுலகும் கோலோச்ச வல்ல விமல தநுவுடைய மெய்யடியாரே-இந்திரராகிய குபேரராகிய வழியடியாரே நினைத்தவை யாவற்றையும் கண்டு உண்டு விமல அவாவினையும் விண்டு விமல தநுவை அமல மாக்கி உபரதி பெற்று உண்மைத் துறவிகளாய் நித்தியத்துவம் பெறுதற்கு உரியராவர் என்பது வெள்ளிடை மலையாம்.

இல்லைத்துறத்தற்கு—கதவம் திறத்தற்கு உரிய சாதகம் என்னை? எனின், அது பின் வரும் பிரபல சுருதிப்பிரமாணம் நோக்கி அறிதற்பாலது.

## திருமந்திரம்

மேலை அணாவில் விரைந்திரு காலிடில்
காலனு மில்லை கதவுந் திறந்திடும்
ஞால மறிய நரை திரை மாறிடும்
பாலனு மாவன் பராநந்தி ஆணையே.

(ஷை 3ம் தந். கேசரியோகம் செ. 7)

மேலை அணா—அண்ணாக்கு. இருகால் —வாசி. “வாயுவைக் கபாலம் ஏற்ற வல்லிரேல்” என்னும் சிவ வாக்கியர் திருவாக்கும் இப்பொருட்டேயாகும். இச் சாதகம் கயிலை முதற்குரவனாகிய எம்பெருமான் அருளால் அறிதற்பாலது. கதவம் திறந்து — மாயையைத் துரந்து கன்னி வனம் அடைந்தோர் — மாற்றிப் பிறந்தோர் நரை திரை மூப்புப் பிணியும் சாக்காடும் நீங்கி நித்தியத்துவம் பெறுதல் சத்தியமே என்பது எம்பெருமான் திரு ஆணை ஆதல் இம் மந்திரத்தால் நன்று வலியுறுத்தப்பட்டது. கதவம் திறந்து கன்னி வனம் அடையாதார் -- சிவ

தரிசனம் பெருதார் பிணி மூப்புக் களால் நலிந்து சரீரம் பிணவியல் அடைய மாண்டு பிறவி வலைப்படுதல் சொல்லாமலே அமையும்.

### திருமந்திரம்.

மெய்த்தா ளகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள்கொண் டாருந் திறந்தறி [வாரில்லை
பொய்த்தா ளிடும்பையைப் பொய்யற நீ [விட்டங்
கத்தாள் திறக்கில் அரும்பேற தாமே.

(ஷை 8-ம் தந். வாய்மை செ. 11.)

இதனுல் நமது உடலகத்துள்ள இறைவனுகிய நந்தியை — நந்தி ஒளியாகிய அமல ஒளியை மாயையாகிய — அஞ்ஞான மறைப்பாகிய கதவம் திறந்தே கண்டு அடைய வேண்டும் என்பதும்வாய்மையைக் கைக்கொண்டு ஒழுகுவோர்க்கே — வாய்மையான முயற்சியுடைய மெய்யடியார்க்கே இப் பெற்றி கைகூடும் என்பதும் இதனுற்ருன் பெறற்கரும் பேருகிய அறமுதல் நாற்பொருட் பயனும் கைகூடும் என்பதும் நன்று பெறப்படுதல் கண்டு கொள்க. பின் வரும் பிரமாணமும் நம் உடலகத்துள்ள அஞ்ஞானக் கதவை — அழுக்கு மனப் பூட்டைத் திறப்பது வாய்மையே என்பதனை நன்று புலப்படுத்துகின்றது.

### ஞானக்கும்மி

பூட்டைத்திறப்பது கையாலேமனப்
பூட்டைத்திறப்பது மெய்யாலே
வீட்டைத்திறக்க முடியாமல்விட்ட
விதியிதேன்கிறீர் ஞானப்பெண்ணே.

(ஷை–செ. 43)

இவ்வாற்ருல் நமது சரீரமே வாய்மையான ஆலயம் என்பதும் குருநெறி கடைப்பிடித்து வாய்மையைக் கைக்கொண்டு ஒழுகுவதனுற்ருன் அச்சரீரமாகிய இல்லைத் திறத்தலாகிய—துறத்தலாகிய வாய்மையான திறவு—துறவு ஏற்படும் என்பதும், இவ்வாறு அச்சரீரமாகிய வீட்டைத் திறந்து சிவ தரிசனம் பெற்று நித்தியத்துவம் அடைய முடியாதவரே "எல்லாம் விதி வசம்" "எம் தலைவிதி" எனக் கூப்பாடுகள் போட்டுக் கொண்டு அவ் விதியை வெல்ல முடியாது பிணி மூப்புக்களால் நலிந்து அவ் விதி வசப்பட்டு மாண்டு பிறவி வலைப்படுகின்றனர் என்பதும் வெள்ளிடை மலையாம். காய மாயத்தைக் கழிப்பதே— மாயையை — அஞ்ஞான இருளைத் துரத்தலே வாய்மையான திறத்தல் — துறத்தல் என்பதனையும், இப் பெற்றி கைகூடப் பெற்றவரே "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆகிய இறைவன் திருவடி கண்டு சிவகதி பெறுவார் — நித்தியத்துவம் பெறுவார் என்பதனையும் பின் வரும் பிரமாணமும் நன்று வற்புறுத்தி நிலை நாட்டுதல் கண்டு கொள்க.

### திருமந்திரம்.

வம்பு பழுத்த மலர்ப்பழ மொன்றுண்டு
தம்பாற் பறவை புகுந்துணத் தாவெட் [டா(து)
அம்புகொண் டெய்திட் டகலத் துரந்திடில்
செம்பொற் சிவகதி சென்றெய்த லாமே.

(ஷை 8-ம் தந். வாய்மை செ. 13.)

பழம்— "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆகிய சிவம் என்னும் செம்பொருள். பறவை—மாயாகாரியமாகிய பொறி புலன்கள்—அஞ்ஞான மறைப்பு. அம்பு என்பது புள்; வடு நீங்கிய கந்து. அதுவே தூய உணர்ச்சி எனப்படுவது. ஆராமை என்னும் தேயுவை ஊட்ட ஊட்ட அவ் இலட்சியமே ஞானக்கினியாய் நின்று மாயையை—இருளை—அஞ்ஞானக் கதவை விலகச் செய்யும். அப்பொழுதே ஆசான் தரிசனம் உளதாகும். —கன்னிவனம்— மறைக்காடு அடையப்படும் என்க.

### அப்பர் தேவாரம்.

புள்ளுவர்ஐவர்கள்வர்புனத்திடைப்புகுந்து [நின்று
துள்ளுவர்சூறைகொள்வர்தூ நெறிவிளைய [லொட்டார்
முள்ளுடையவர்கடம்மைமுக்கணன் [பாதநீழல்
உள்ளிடைமறைந்துநின்றங்குணர்விஞல் [எய்யலாமே.

(ஷை தனித்திருநேரிசை செ. 5)

இங்கே கூறப்பட்ட உணர்வே "அம்பு" எனப்படுவது என்க.

### பைபிள்.

"தட்டுங்கள்திறக்கப்படும்"
"கேளுங்கள்கொடுக்கப்படும்"

என்ருர் கிறிஸ்துநாதரும்.

வாய்மையான இல்லற ஒழுக்கத்தாற்ருன் —நிறை முறையான அருந்தல் பொருந்தல்களாகிய தூலப் பயில்வுகளாற்ருன் வாய்மையைக் கைக்கொண்டு ஒழுகுதலாகிய சூக்குமப் பயில்வுகளாற்ருன் நமது சரீரமாகிய ஆலயத்துள்ள அழுக்காகிய மறைப்பு நீக்கப்படவேண்டும் — மறைக்காட்டுக் கதவம் திறக்கப்படவேண்டும் என்பதும் அதுவே நித்தியத்துவ நெறி என்பதும் இவற்ருல் நன்று வலியுறுகின்றன. மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் மறைக்காட்டுக் கதவுதிறத்தல் என்பதன் உண்மைப் பொருள் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்!


## "வித்தகம்"

**சந்தா விவரம்.**

வருட சந்தா

உள் நாட்டிற்கு முன் பணம் ரூ. 3 0 0
வெளி நாட்டிற்கு ,, ,, ரூ. 4 0 0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

# *** ஈழநாடும் தமிழும். ***

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன்
வித்துவான் ப்ரம்மஸ்ரீ. சி. கணேசையர்
அவர்கள் எழுதியது.

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியர்க்கே உரியது.)

(தொகுதி 2. 15-ம் வாரத் தொடர்ச்சி.)

## சிவசம்புப் புலவர்.

இவர் சாலிவாகன சகாப்தம் ௧௲௭௫௨-ல் யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறையைச் சார்ந்த உடுப்பிட்டியிலே பெரும் பிரபுவாயிருந்த அருளம்பல முதலியாருக்கு காமக்கிழத்தி வயிற்றிற் பிறந்தவர். இருபாலைச் சேனாதிராயமுதலியாருடை மாணாக்கராய் விளங்கிய நல்லூர்ச் சரவணமுத்துப் புலவரிடத்தும் அவர் மாணாக்கராய் விளங்கிய நல்லூர்ச் சம்பந்தப் புலவரிடத்தும் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களும் இராமாயணம் பாரதம் முதலிய இலக்கியங்களும் பிறவும் கற்றுணர்ந்தவர். இளமை தொடங்கிக் கவி பாடும் சாமார்த்தியமுமுடையவர். ஈழ மண்டலத்திலே பிரபந்தம் பாடியவர்களுள் இவரே அதிகமான பிரபந்தம் பாடியவர். தன்மேற் கவி பாடிவரும் பாவலர்களுக் கெல்லாம் புட்கலா வர்த்த மென்னப் பொன் மழை பொழியுங் காவலரும், செந்தமிழ்ப் புலவர்கள் கூடிய சங்கங்களில் சிங்கம் போல் நின்று பிரசங்கஞ் செய்யும் நாவலரும் செந்தமிழ் மொழி அபிமான சீலருமாகிய இராமநாதபுரம் ரவிகுலமுத்து விஜயரகுநாத பாஸ்கர சேதுபதி மகாராசாவின் மீது கல்லாடக் கலித்துறையும், நான்மணிமாலையும், இரட்டைமணிமாலையும் வேறு தனிக் கவிகளும் பாடிச் சென்று அவர் முன்னிலையிலே ஸ்ரீமாந். ரா. இராகவ ஐயங்கார் முதலிய வித்துவான்கள் கூடிய சபையில் அரங்கேற்றி அவர் மதிப்பும் பரிசிலும் பெற்றவர். பொன்னுச்சாமித் தேவர்கள் அருந்தவப் புதல்வரும் மதுரையின்கண் இப்பொழுது நிகழும் தமிழ் சங்கத்தைத் தாபித்தவரும் செந்தமிழ் கலைஞருமாகிய ஸ்ரீமாந். பாண்டித்துரைத் தேவரவர்கள் மேலும் ஒரு நான்மணிமாலை பாடிப் பரிசிலும் பெற்றவர். இவையன்றி இந்தியாவிலும் ஈழ மண்டலத்திலுமுள்ள சில ஆலயங்கள் மீதும் பல பிரபந்தங்கள் பாடியுள்ளார். வேறும் பிரபுக்கள் மீதும் சில நூல்கள் இயற்றியுள்ளார். இவரியற்றிய பிரபந்தங்கள் ஏறக்குறைய அறுபது வரையிலுள்ளன. அவற்றின் பெயர்கள் ஈண்டுக் காட்டப்புகின் விரியுமென்றஞ்சி விடுக்கின்றோம். பாடும் வன்மை நோக்கி இவருக்குப் புலவரென்றும் பெயர் நாவலராற் கொடுக்கப்பட்டதென்பர்.

இவர் மேற்கூறிய பிரபந்தங்கள் முதலியவற்றை இயற்றியதேயன்றி சில நூல்களுக்கு உரையும் இயற்றியுள்ளார். அவற்றுள் அச்சிட்டு வெளிவந்தன மறைசையந்தாதியுரை யாப்பருங்கலக் காரிகையுரை, கந்த புராணத்து வள்ளியம்மை திருமணப்படலத்து வுரை முதலியன.

அக்காலத்திலே இவரிடத்துக் கற்று வித்துவான்களானவர்கள் பலருளர். அவருட் சிறந்து விளங்கியவர்கள் வல்லுவெட்டித்துறை இயற்றமிழ் போதகாசிரியர் ச. வயித்திலிங்கம் பிள்ளையும், அவ்வூர் த. அருணசலம் பிள்ளையும், புலோலி ம. தில்லைநாதநாவலரும், வ. குமாரசுவாமிப் புலவரும், அ. வேல்மயில்வாகனச் செட்டியாரும், தும்பளை ம. முத்துக்குமாரசாமி குருக்களும், கரணவாய் வடக்கு சு. கனகசபாதிக் குருக்களும், கரணவாய் தெற்கு தி. ஞானப்பிரகாச தேசிகரும், கை. திருஞானசம்பந்த தேசிகரும், கை. நமசிவாய தேசிகரும், அல்வாய் நொத்தாரிசு இ. ஆறுமுகம் பிள்ளையும், பொலிகண்டி வே. சிதம்பரப் பிள்ளையும், மந்துவில் ஆசிரியர் வயித்திலிங்கச் செட்டியாரும் முதலாயினோர்.

இவர் தமது தந்தையின் குலப்புதல்வராகிய கோப்பாய் அம்பலவாண முதலியார் மீது அவர்புத்திரரும் சாமாதான நீதிபதியுமாகிய மயில்வாகனம் அவர்கள் மீதும் மிகுந்த அன்பும் மதிப்புமுடையவர். மயில்வாகனம் அவர்கள் தேகவியோகமான காலத்து அவர் மீது மயில்வாகன வம்ச வைபவ மென்னும் ஒரு நூலும் இயற்றியுள்ளார்.

இவரியற்றிய கல்லாடக்கலித்துறை முதலிய வற்றில் இவர் பாடற்றிறம் அறியும் பொருட்டுச் சில செய்யுள்கள் காட்டுதும்.

# பாற்கர சேதுபதி.

## கல்லாடக் கலித்துறை.

### உண்மகிழ்ந் துரைத்தல்.

பொருந்தனல் வெஞ்சுரம் பொன்னுக்குற் றேன்கட் [புணர்த்துன்புன்
வருந்தன மூழ்கத் தொடமுனம் பாற்கர வள்ளறந்த
பெருந்தனந் தீண்டமுன் பாவல ரொற்கம் பிரிந்ததென
மருந்தன வின்மொழி யாய்தீர்ந்த தற்புதம் வாய்ப்பித்ததே.

### பதிபரிசுரைத்தல்.

வரத்திய லோங்கிய பாற்கர னாட்டு வளவயல்பார்
தரத்தியல் வையைப் பெருக்கது பார்மலர்த் தண்டலைபார்
புரத்தியல் பாரன்னசத்திரம் பார்செல்வர் பொன்மனைப்பார்
சரத்திய னுக்கன மேபார் தருங்கல்விச் சாலைகளே.

## பாற்கரசேதுபதி நான்மணிமாலை.

### வெண்பா.

உம்பரிடைப் பாற்கரன்று னோவாத வெஞ்சுடரோ
னிம்பரிடைப் பாற்கரன்றண் ணென்சுடரோன்—பம்பும்
புறவிருளைப் போக்குமவன் பொங்கவகத் தூர்கார்
நிறவிருளைப் போக்குமிவ னின்று.

### கலித்துறை.

நின்றஞ்ச மென்ன வடைபவர்க் கன்னை நெடிதுறமேற்
சென்றஞ் சவித்த வடியவர்க் காவி செந்தமிழ்க்கு
மன்றஞ் சகத்துக்குக் கற்பக மன்னர் மகுடமணி
குன்றஞ் சமான மெனுங்குணப் பாற்கரக் கொற்றவனே.

## பாற்கரசேதுபதி இரட்டை மணிமாலை.

### கலித்துறை.

மாணுறு மீகை பொறைநிறை பத்திமை வாய்மையுறக்
காணுறு நீதியுட் டேய்மை கருணைநற் கல்வியின்ன
பூணுறு மேரு நிகர்புயப் பாற்கரப் புண்ணியமெய்க்
கேணுறு மங்க மெனத்தவத் தாற்பெரி தெய்தியவே.

## பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலை.

### வெண்பா.

சீர்வாய்ந்த சைவ சிகாமணிபொன் னுச்சாமி
பேர்வாய்ந்த செல்வப் பிரபுமைந்த—னேர்வாய்ந்த
பாண்டித் துரையையுற்ற பாவலர்க ளில்லமெல்லாம்
வேண்டித் திருமருவு மெய்.

### வெண்பா

சொல்லாரும் பாமாலை சூடினான் வண்மையினா
னெல்லாரு மோர்வடிவா யேய்ந்தனையா—னல்லார்கள்
பல்லாரு மேத்தியிடும் பாண்டித் துரைபுகழ்மை
செல்லாத தெம்மா திரம்.

## மயில்வாகனப்பிள்ளை வம்சவைபவம்.

தென்னிலங்கைத் தீவினுக்கோர் தீப மென்கோ
தெளிதருசஞ் சீவியென்கோ செந்தே னென்கோ
மன்னர்முடி மணியென்கோ தரும தான
மாளிகையென் கோசுகுண வடவெற் பென்கோ
புன்னெறியி லாக்கருணைப் புணரி யென்கோ
போதருமோக் குஞ்சுகந்த புட்ப மென்கோ
சொன்னதரு வென்கோமெய்ச் சுரபி யென்கோ
துங்கமயில் வாகனமா துரையைத் தானே.

இவர், ஆறுமுகநாவலர்கள் இவ்வுலக வாழ்வைத் துறந்த போது அவர் மீது பாடிய கவிகளுள் ஒன்றையும் ஈண்டுத்தருதும்

ஆரூர னில்லை புகலியர் கோனில்லை யப்பனில்லை
சீரூரு மாணிக்க வாசக னில்லை திசையளந்த
மேரூரு மாறு முகநா வலனில்லை பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தை போதிக்கு நீர்மையரே.

இக் கவியைப் பாடிய இப்புலவரைப் புகழ்ந்து சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் புகழ்ந்து பாடிய ஒரு கவியையும் ஈண்டுக் காட்டுதும்.

ஆரூர னில்லையென் காரிகை யாலிவ் வவனிதொழப்
பேரூரு மாறு முகநா.வலர்பெரு மான்பெருமை
சீரூரு மாறு தெரித்தாய் சிவசம்பு தேசிகநிற்
காரூரி னேரின்றன் றேநின்சொல் வண்மை யறிந்தனனே.

இத்தகைய இப்புலவர் சாலிவாகன சகாப்தம் ௧௮௬௧ க்குச் சமமான சாதாரண வருஷம் புரட்டாதி மாதம் ௧௩-ம் திகதி இவ்வுலக வாழ்வைத் துறந்தார். அதனை

### வெண்பா.

சாதா ரணவனிதை சாந்தன்றேய் பிற்பக்க
மீதாரும் பன்மூன்றின் மேதினிவிட் — டாதார
மன்னு சிவசம்பு மாபுலவன் சங்கரனார்
துன்னுலகுற் றூற்றான் சுகம்.

என்னும் வெண்பாவா லறிக.

Imprimerie "VITTAGAM"— Pondichery. Le Directeur-Gerant. R. Nagarattinam.